**IN THE COURT OF THE I-st ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**

**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.20/2020 - PW-3**

| | |
|---|---|
| Name | **திரு.மணிகண்டன்** |
| Father Name | குப்புசாமி |
| Village /Area | |
| Taluk | |
| Occupation | |
| Age | |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 03.12.2024.

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் ஆற்காடு வட்டம், முப்பதுவெட்டி, பள்ளிக்கூட தெருவில் வசிக்கிறேன். நான் சிற்பி வேலை செய்கிறேன். அ.சா.1,2 தெரியும். வழக்கில் இறந்த நடராஜனை தெரியும். நடராஜன் மகன்தான் அ.சா.1 ஆவார். ஆஜர் எதிரிகள் 7 பேரையும் எனக்கு தெரியும். எதிரிகள் 7 பேரும் எங்கள் ஊரைச் சார்ந்தவர்கள். 02.03.2014 ம் தேதி எங்கள் ஊர் பள்ளியில் தமிழக அரசு விலையில்லா மிக்சி, கிரைண்டர் வழங்கி கொண்டிருந்தார்கள். அப்போது நானும் மிக்சி, கிரைண்டர் வாங்குவதற்கு சென்றேன். என்னுடைய Yahama இருசக்கர வண்டியை நிறுத்திவிட்டு பள்ளிக்கு பொருட்கள் வாங்க சென்றேன். அப்போது எங்கள் ஊரைச்சார்ந்த சிலம்பரசன் என்பவர் அவர் வந்த இருசக்கர வாகனத்தை என் மீது உரசினார். நான் பார்த்து போப்பா என்று சொன்னேன். அதற்கு சிலம்பரசன் அசிங்கமாக என்னை திட்டினார். பிறகு, சிலம்பரசன் என்னை அங்கேயே அடித்துவிட்டார். நான் பள்ளியில் இருந்து திரும்பி

ஊருக்கு வரும் போது, முப்பதுவெட்டி டர்னிங் பஸ்டாப்பில் எங்கள் ஊரைச்சார்ந்த நடராஜன், கோபி, ரஞ்சித் இன்னும் சில நபர்கள் இருந்தார்கள். அவர்களிடம் நான் நடந்ததை சொன்னேன். அதற்கு அவர்கள் சண்டை வேண்டாம் சமாதானமாக போகலாம் என சொன்னார்கள். அப்போது பகல் 1 ல் இருந்து 2 மணி இருக்கும். பாஸ்கரன், சிலம்பரசன் ஆகியோர் நடராஜன் மற்றும் ராஜேந்திரன் தலையில் இரும்பு ராடால் அடித்தார்கள். கண்ணனும், பிரேம்குமாரும் கட்டையால் நடராஜனையும், ராஜேந்திரனையும் அடித்தார்கள். சரத்குமார், கபிலன், விக்னேஷ் மூவரும் கையாலும், காலாலும் நடராஜனையும், ராஜேந்திரனையும் அடித்தார்கள். காலால் எட்டி எட்டி உதைத்தார்கள். பிறகு, ஆற்காடு அரசு மருத்துமனைக்கு நான் முதலில் சென்று, சேர்ந்தேன். அதன் பிறகு நடராஜன், ராஜேந்திரன் ஆகியோரையும் ஆற்காடு அரசு மருத்துமனைக்கு அழைத்து வந்தார்கள். நான் ஆற்காடு அரசு மருத்துமனையிலேயே உள்நோயாளியாக இருந்தேன். அடிப்பட்ட நடராஜன், ராஜேந்திரனை வேலூர், அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். 8 நாட்கள் கழித்து நடராஜன் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். வேலூர், நீதித்துறை நடுவர் 3 நீதிமன்றத்தில் நான் வாக்குமுலம் அளித்தேன். கு.வி.மு.ச பிரிவு 164 ன் கீழ் நான் அளித்த வாக்குமூலம் தான் **அ.சா.ஆ.4** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில் –**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

**S/d. M.Selvam,**
**I Additional District Judge,**
**Ranipet.**